SAKTHI MARKETING
வாடிக்கையாளர்களின் நன் மதிப்பை பெற்ற நிறுவனம்
பெட்ரோல், டீசல்,
சர்வோ ஆயில்
சில்லரை விற்பனை நிலையம்
इंडियनऑयल IndianOil
#41/B, Sabanayagar Street, Chidambaram-1.
Ph: 04144-223177, Cell: 98423 35007

# மாலை எக்ஸ்பிரஸ்

MAALAI EXPRESS

மாநிலம் பயனுற!

குரோதி வருடம் ஐப்பசி 19 | ஹிஜிரி 1446 ஜமாதுல் அல்வல் 2

மல்டிகலர் பைகள்
துணிக்கடை, நகைக்கடை, திருமண மற்றும் சுபவிசேஷங்களுக்கு அனைத்து விதமான மாடல்களிலும் சிறந்த முறையில் பைகள் தைத்துதரப்படும்.
தொடர்புக்கு:- 98423 35007

● புதுச்சேரி ● செவ்வாய்க்கிழமை, நவம்பர் 5, 2024 ● வெளியூர்: 6-11-2024, புதன்கிழமை RNI.REG.NO.PONBIL/2015/68788 ● Volume - 10 ● Issue - 118 ● 6 பக்கம் ● ரூ.6

## அடுத்த அமெரிக்க ஜனாதிபதி யார்?

# இன்று மாலை வாக்குப்பதிவு தொடக்கம்

வாஷிங்டன், நவ. 5-

உலகின் சக்தி வாய்ந்த நாடான அமெரிக்காவின் ஜனாதிபதி தேர்தல் 4 ஆண்டுக்கு ஒருமுறை நடைபெறும். தற்போதைய ஜனாதிபதியாக ஜோ பைடன் உள்ளார். அவரது பதவி காலம் வருகிற 2025ம் ஆண்டு ஜனவரி மாதத்துடன் முடிவடைகிறது.

எனவே அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கான ஏற்பாடுகள் இந்த ஆண்டு தொடக்கத்திலேயே தொடங்கிவிட்டன. அந்த நாட்டு சட்டப்படி நவம்பர் மாதம் பிறந்து முதல் செவ்வாய்க்கிழமை அன்று தேர்தல் நடைபெறும்.

ஜனாதிபதி தேர்தலில் தற்போதைய ஜனாதிபதியான ஜோ பைடன், ஜனநாயக கட்சி சார்பில் தானே போட்டியிடுவதாக அறிவித்தார். அதேபோல குடியரசு கட்சி வேட்பாளராக முன்னாள் ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் களம் இறங்கினார். வயோதிகம் காரணமாக போட்டியில் இருந்து விலகிய ஜனாதிபதி ஜோ பைடன். தனது கட்சி சார்பில் தற்போதைய துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் போட்டியிடுவார் என்று அறிவித்தார். அதன்படி அவரும் களத்தில் குதித்தார்.

அமெரிக்க மக்கள் தங்கள் ஜனாதிபதியை நேரடியாக தேர்ந்து எடுப்பதில்லை. மாகாணங்களில் மக்கள் அளிக்கும் ஓட்டுகள் கணக்கிடப்பட்டு தேர்வுக்குழு உறுப்பினர்கள் வாயிலாக (எலெக்ட்ரோல் காலேஜ்) ஜனாதிபதி தேர்வு செய்யப்படுவார்.

இந்த எலெக்ட்ரோல் காலேஜ் ஓட்டுகள் ஒவ்வொரு மக்கள் தொகை அடிப்படையில் மாகாணத்துக்கு மாகாணம் வேறுபடும். அந்தவகையில் மக்கள் தொகை அதிகம் உள்ள கலிபோர்னியாவில் 54 எலெக்ட்ரோல் காலேஜ் ஓட்டுகளும், குறைந்த மக்கள் தொகை உள்ள வியாமிங் மாகாணத்தில் 3 ஓட்டுகளும் உள்ளன.

### அனைத்து ஏற்பாடுகளும் தயார்



மொத்தம் உள்ள 50 மாகாணங்களில் 538 தேர்வுக்குழு உறுப்பினர்கள் உள்ளனர். இதில் 270 பேரின் ஆதரவை பெறுபவர்களே ஜனாதிபதியாக தேர்ந்து எடுக்கப்படுவார்கள். மொத்தமுள்ள 50 மாகாணங்களில் 48 மாகாணங்களில் அதிக ஓட்டு பெறுபவர்களுக்கு, அனைத்து எலெக்ட்ரோல் ஓட்டுகளும் கிடைத்துவிடும். அவரே வெற்றி பெற்றவராவார். மைன், நெப்ரஸ்கா மாகாணங்களில் மட்டுமே 2ம் இடம் பெறுபவர்களுக்கு விகிதாசார முறைப்படி ஓட்டு கள் பகிர்ந்து வழங்கப்படும்.

இந்த தேர்தலில் 16 கோடியே 50 லட்சம் பேர் தகுதி படைத்த வாக்காளர்களாக உள்ளனர். அமெரிக்க சட்டப்படி தேர்தலில் முன்கூட்டியே வாக்குகளை செலுத்த முடியும். அதன்படி இமெயில் மற்றும் தபால் மூலம் 7 கோடிக்கும் அதிகமான வாக்காளர்கள் ஏற்கனவே வாக்களித்துவிட்டனர்.

தேர்தல் களத்தில் கமலா ஹாரிஸ், டிரம்ப் இடையே கடும் போட்டி இருந்தது. கருத்து கணிப்புகளில் இருவரும் சமபலத்திலேயே இருந்து வந்தனர். 50 மாகாணங்களில் வெற்றியை நிர்ணயிக்கும் மாகாணங்களாக அரிசோனா,

6-ம் பக்கம் பார்க்க

## திருச்சியில் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு வெடிகுண்டு மிரட்டல்

திருச்சி, நவ. 5-

நாடு முழுவதும் விமானங்கள் மற்றும் பள்ளிகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கும் சம்பவங்கள் சமீப காலமாக அதிகரித்து வருகிறது. இதனைத் தொடர்ந்து அதிகாரிகள் சோதனையிடும் போது அது புரளி என தெரியவருகிறது.

இந்த நிலையில், திருச்சி மாவட்டத்தில் பள்ளிகள் மற்றும் ஒரு கல்லூரிக்கு இன்று வெடிகுண்டு மிரட்டல் விடுத்துள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

திருச்சியில் மகாத்மா காந்தி நூற்றாண்டு மேல்நிலைப்பள்ளி, ராஜாஜி வித்யாலயா, சந்தானம் வித்யாலயா, ராஜம் கிருஷ்ணமூர்த்தி மேல்நிலைப்பள்ளி மற்றும் ஹோலி கிராஸ் பெண்கள் கல்லூரிக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட பள்ளிகள் மற்றும் கல்லூரியில் வெடிகுண்டு நிபுணர்கள் சோதனையில் ஈடுபட்டனர்.

## வாயு கசிவு ஏற்பட்ட தனியார் பள்ளிக்கு 3 நாட்கள் விடுமுறை

சென்னை, நவ. 5-

சென்னை திருவொற்றியூர் கிராமத்தெருவில் தனியாருக்கு சொந்தமான விக்டரி மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப்பள்ளி உள்ளது. இங்கு 6ம் வகுப்பு முதல் பிளஸ்2 வரை 1500க்கும் மேற்பட்ட மாணவமாணவிகள் படித்து வருகிறார்கள். இந்த பள்ளி கட்டிடத்தின் 3வது தளத்தில் 6ம் வகுப்பு முதல் பிளஸ்2 வரை மாணவ மாணவிகள் படித்து வருகிறார்கள். அதற்கு எதிர் தளத்தில் ஆய்வுக்கூடமும் உள்ளது.

கடந்த மாதம் 26ந் தேதி இந்த ஆய்வுக்கூடத்தில் இருந்து ரசாயன வாயு கசிவு ஏற்பட்டது. இதனால் வகுப்பறையில் இருந்த 45 மாணவிகளுக்கு வாந்தி, மயக்கம், மூச்சுத்திணறல், கண் எரிச்சல், தொண்டை எரிச்சல் ஏற்பட்டது. சில மாணவிகள் வாந்தி ஏற்பட்டு மயங்கி விழுந்ததால் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வீடு திரும்பினர். இதனால் கடந்த 1 வாரமாக பள்ளிக்கு விடுமுறை

6-ம் பக்கம் பார்க்க

## கருணாநிதியின் 3 அடி உயர வெண்கல சிலை: உதயநிதி ஸ்டாலின் திறந்து வைக்கிறார்

விழுப்புரம், நவ. 5-

விழுப்புரம் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி திட்டப்பணிகளின் நிலை குறித்து துணை முதல் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நாளை (புதன்கிழமை) ஆய்வு செய்கிறார். இதற்காக அவர் இன்று (செவ்வாய்க்கிழமை) மதியம் சென்னையில் இருந்து காரில் புறப்படுகிறார். மாலை 4 மணியளவில் விழுப்புரம் மாவட்டத்தின் எல்லையான ஓங்கூர் மற்றும் திண்டிவனம், விக்கிரவாண்டி சுங்கச்சாவடி ஆகிய இடங்களில் உதயநிதி ஸ்டாலினுக்கு அமைச்சர் பொன்முடி, தி.மு.க. மாவட்ட பொறுப் பாளர் பொன்.கவுதம சிகாமணி ஆகியோர் தலைமையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்படுகிறது. இதையடுத்து துணை முதல் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அங்கிருந்து திருவெண்ணெய்நல்லூர் செல்கிறார். அங்கு மரகதம்



கந்தசாமி மண்டபத்தின் முன்பு புதியதாக நிறுவப்பட்டுள்ள முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் 3 அடி உயரமுள்ள வெண்கல சிலையை திறந்து வைத்து பேசுகிறார். அதன் பின்னர் விழுப்புரம் அரசு சட்டக்கல்லூரியில் நடைபெறும் விழாவில் கலந்து கொண்டு பள்ளி மாணவர்களுக்கு அரசு சார்பில் விளையாட்டு உபகரணங்களை வழங்குகிறார்.

## ரூ.5 கோடி கேட்டு மீண்டும் நடிகர் சல்மான் கானுக்கு கொலை மிரட்டல்

மும்பை, நவ. 5-

பாலிவுட் நடிகரான சல்மான் கானுக்கு மீண்டும் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக காவல்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும், மிரட்டல்காரர்கள் அவரிடம் இருந்து ரூ.5 கோடி கேட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மும்பை போக்குவரத்து காவல்துறையினரின் ஹெல்ப்லைனில் நள்ளிரவில் கொலை மிரட்டல் அழைப்பு வந்ததாக



அவர்கள் தெரிவித்துள்ளனர். மிரட்டல் விடுத்தவர் மராட்டிய அமைச்சர் பாபா சித்திக் கொலையில் தொடர்புடைய லாரன்ஸ் பிஷ்னோயின் சகோதரர் என்று கூறியதாகவும் போலீஸ் அதிகாரி கூறியுள்ளார்.

சல்மான் கான் உயிருடன் இருக்க விரும்பினால், அவர் எங்கள் பிஷ்னோய் சமூகத்தினர் கோவிலுக்குச் சென்று மன்னிப்பு கேட்க வேண்டும் அல்லது ரூ.5 கோடி கொடுக்க வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால், அவரைக் கொன்று விடுவோம் என்று அந்த செய்தியில் கூறியுள்ளார். மிரட்டல் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் சல்மான் கானுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத்தியுள்ளனர். கொலை முயற்சி மற்றும் மிரட்டி பணம் பறித்தல் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளில் சிறையில் இருக்கும் லாரன்ஸ் பிஷ்னோய்க்கு இந்த மிரட்டலில் தொடர்புள்ளதா என்பது குறித்து காவல்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## 2026 தேர்தலில் தி.மு.க. கூட்டணியா? வேறு கூட்டணியா?- திருமாவளவன் பதில்

சென்னை, நவ. 5-

நடிகர் விஜய் தமிழக வெற்றிக் கழகம் என்ற புதிய கட்சியை தொடங்கி முதல் மாநாட்டை விக்கிரவாண்டியில் நடத்தி முடித்துள்ளார்.


த.வெ.க. மாநாட்டில் கூடிய இளைஞர்கள் கூட்டம் தமிழகத்தின் அரசியல் கட்சிகளை திரும்பி பார்க்க வைத்துள்ளது. மாநாட்டில் பேசிய விஜய் கூட்டணியை வரவேற்று அதிகாரத்தில் பங்கு தரப்படும் என்று அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பு தமிழக அரசியல் கட்சிகள் இடையே பெரும் அதிர்வை ஏற்படுத்தி உள்ளது.

இதனிடையே சென்னையில் நடைபெறும் புத்தக வெளியீட்டு விழாவில் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவனுன், தமிழக வெற்றிக்கழகத் தலைவர் விஜயும் ஒரே மேடையில் சந்தித்து பேச உள்ளதாக தகவல் வெளியானது.



இதனால் இரு கட்சிகளுக்கு இடையே 2026 சட்டமன்ற தேர்தலையொட்டி கூட்டணி உறுதி என்று பரபரப்பாக பேசப்பட்டு வந்தது.

இந்த நிலையில், 2026 சட்டசபை தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் தான் நீடிப்போம் என்று விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் கூறியுள்ளார். மேலும் இந்த கூட்டணியை விட்டுவிட்டு வேறு கூட்டணிக்கு போக வேண்டிய எந்த தேவையும் வி.சி.க.வுக்கு இல்லை என்றும் கூறியுள்ளார்.



E-mail:maalaiexpresspdy@gmail.com
● செவ்வாய் ● நவம்பர் 5, 2024
மாலை எக்ஸ்பிரஸ்

# குடிநீர், இணைப்பு நடைபாதை அமைத்து தரக்கோரி ஆதார்கார்டை ஆட்சியரிடம் ஒப்படைக்க திரண்டு வந்த மக்களால் பரபரப்பு

**தென்காசி, நவ. 5-**

தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடந்த மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்திற்கு வடநத்தம்பட்டி கிராமத்தை சேர்ந்த 50க்கும் மேற்பட்டோர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத் திற்கு ஆதார் கார்டு மற்றும் குடும்ப அட்டைகளுடன் அடிப்படை வசதிகளை செய்துதரக் கோரி ஆட்சியர் கமல்கிஷோரிடம் மனு அளித்தனர்.



அந்த மனுவில் கூறியிருப்பதாவது: தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் அருகே உள்ள வடநத்தம்பட்டி கிராமம் அம்பேத் கர் நகரில் 35 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட இந்திரா குடியிருப்பு பகுதியில் சுமார் 150 குடியிருப்புகளுக்கு குடிநீர் மற்றும் நடை பாதை வசதிகளை செய்து தரக் கோரி பல முறை மனு கொடுத்தும் நடவடிக்கை இல்லை என்றும், தங்கள் பகுதிக்கு நடைபாதை மற்றும் மத்திய அரசு வழங்கக் கூடிய ஜல்ஜீவன் திட்டத்தில் குடிநீர் இணைப்பு வேண்டிய கடந்த மாதம் 7ம் தேதி அன்று மாவட்ட ஆட்சியரிடம் புகார் மனு கொடுத்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என கூறி இருந்தனர். மனுவை பெற்றுக்கொண்ட ஆட்சியர் உரிய நடவடிக்கை எடுக் கப்படும் என்று தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து ஊர் நாட்டாண்மை சுப்பிரமணியன் செய்தி யாளர்களிடம் பேட்டியின் போது கூறியதாவது: நாங்கள் எங்கள் பகுதிக்கு அடிப்படை வசதிகள் கேட்டு பலமுறை அதிகாரிகளிடம் மனு கொடுத்தும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. தற்போது மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்துள்ள நிலையில் இந்த மனு மீது நடவடிக்கை எடுக்க வில்லை என்றால் எங்களுடைய ஆதார் கார்டு குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை போன்றவற்றை மாவட்ட நிர்வாகத்திடம் ஒப்படைப்போம் என கூறினார். தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு மனு கொடுக்க நூற்றுக்கும் மேற்பட்ட கிராம மக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு திரண்டு வந்து மனு கொடுத்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.

# சம்ஹிதா அகாடமியில் விளையாட்டு தின விழா



**கோவை, நவ. 5-**

கோவை மலுமிச்சம்பட்டி பகுதியில் உள்ள, சம்ஹிதா அகாடமியின் ஏழாம் ஆண்டு விளையாட்டு தின விழா, பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.முன்னதாக நடைபெற்ற இதன் துவக்க விழாவில்,பள்ளியின் முதல்வர் புஷ்பஜா கண்ணதாசன். தேசிய கொடியை ஏற்றி விளையாட்டு போட்டிகளை துவக்கி வைத்தார். இதில் வாயு, அக்னி, பிருத்வி மற்றும் ஜல் என நான்கு அணிகளாக பள்ளி மாணவ, மாணவியர்கள் விளையாட்டு போட்டிகளில் பங்கேற்றனர்.

இதில் பள்ளி மாணவ,மாணவி களின் அணிவகுப்பு நடைபெற்றது. தொடர்ந்து விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் பள்ளியின் ஸ்போரட்ஸ் கேப்டன் மாணவர் ஞானராஜ் வரவேற்று பேசினார். தொடர்ந்து, தடகளபோட்டிகள், சிலம்பம், கராத்தே, பிரமிடு, மாஸ்டர் டிரில் மற்றும் 200 மற்றும் 400 மீட்டர் ஓட்டப்பந்தயம் உள்ளிட்ட போட்டிகள் நடைபெற்றன.

விளையாட்டு தின நிகழ்ச்சிகளை உடற்கல்வி ஆசிரியர்கள் ஹரிதா மற்றும் காந்தி நாதன் ஒருங்கிணைத் தனர். இதில் ஆர்வமுடன் கலந்து கொண்ட மாணவ, மாணவிகள் அசத்தலாக தங்கள் திறமைகளை நிரூபித்தனர்.

அனைத்து போட்டிகளிலும் சிறந்து விளையாடிய அக்னி அணி அதிக புள்ளிகள் பெற்று ஒட்டு மொத்த சாம்பியன் கோப்பையை தட்டி சென்றது. முன்னதாக செய்தி யாளர்களிடம் பேசிய பள்ளி முதல்வர் புஷ்பஜா, மாணவர்களுக்கு விளையாட்டு என்பது மிகவும் முக்கியமான ஒன்று எனவும், எங்களது பள்ளியில் கல்வியோடு மாணவ, மாணவிகளின் விளையாட்டு திறன்களை ஊக்குவிக்கும் வகையில் செயல்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார். விழாவில் மாணவ, மாணவிகள் பெற்றோர்கள், பள்ளி ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்

# James Anderson on retirement talk with Ben Stokes and Brendon McCullum: 'I feel like Joe Pesci in Goodfellas'

**New Delhi, Nov. 5-**

In his book Finding the Edge, James Anderson recounts a pivotal conversation about his potential retirement with England Test captain Ben Stokes, head coach Brendon McCullum, and ECB managing director Rob Key at a hotel in Manchester. As he approached them, Anderson sensed the gravity of the discussion.

"As I walk towards them, it hits me cold. This isn't a team appraisal, is it?" Anderson wrote.

"With each footstep toward the far side of the bar, each of their distinct silhouettes coming into view, the tram journey just gone is suddenly like a blissful past life, the outdoor sun sucked into a horizonless neon-red darkness.

"My brain is doing the maths and my heart is sinking as I go to shake their hands. I feel like Joe Pesci in Goodfellas, ushered into a room under the impression that I'm going to get made, only to be shot.

"They're going to tell me something I don't want to be told, aren't they? Something I've been swerving, darting, shapeshifting, bowling through my whole life."



England's James Anderson acknowledges the crowd after taking his 700th Test wicket following the dismissal of India's Kuldeep Yadav, caught out by Ben Foakes. (Reuters)

With 700 wickets in 187 Tests for England, Anderson is one of the most decorated bowlers in cricket history. He is only the third bowler—and the only fast bowler—to cross the 700-wicket milestone, joining spin legends Shane Warne (708) and Muttiah Muralitharan (800), a feat he reached in March 2023 against India in Dharamsala.

In 2022, Anderson and fellow pacer Stuart Broad were dropped from the England squad touring the West Indies under then-interim director of cricket Andrew Strauss. Anderson recalls how the decision was communicated to him.

"The last time England had tried to do this, it was a 45-second phone call from Andrew Strauss before the West Indies tour in early 2022," Anderson shared.

"He just said on the phone, incredibly bluntly and swiftly, 'There's no easy way to say this, but we're going in a different direction. We're giving younger players a go.' That was it. No further information. End of call."

Anderson chose not to respond since his children were in the car at the time. "I didn't mention it to them, I just drove them home, phoned Stuart Broad—who it turned out had been dropped too—and went to the gym.

"We took our combined 1,177 wickets and raged ourselves fitter. They called it a 'red-ball reset.' It turned out the red-ball reset needed resetting itself quite quickly, and three months later we were back in."

Reflecting on the interaction with Strauss, Anderson concluded, "Strauss and I have never spoken about it since. I guess you'd rather be stabbed in the front than in the back."

## தலையங்கம்

மாலை எக்ஸ்பிரஸ்

5.11.2024 (செவ்வாய்க்கிழமை)

### புதிய தொழில் முதலீடுகள்

தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு மிக வேகமாக முன்னேறிக்கொண்டு இருக்கிறது. உள்நாட்டு முதலீடுகள் மட்டுமல்லாமல் வெளிநாட்டு முதலீடுகளும் வந்து குவிந்து கொண்டு இருக்கின்றன. இதற்கு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினின் வெளிநாட்டு சுற்றுப்பயணங்கள் பெரிதும் துணை நின்றன. கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் ஏறத்தாழ 31 லட்சம் இளைஞர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகளை உருவாக்கும் வகையில் ரூ.9.74 லட்சம் கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன என்று சமீபத்தில் தமிழக அரசு அறிவித்துள்ளது.

2021ம் ஆண்டுக்கு பிறகு தமிழ்நாட்டில் 46 புதிய தொழிற்சாலைகள் திறக்கப்பட்டுள்ளன. 1,39,725 இளைஞர்களுக்கும், மகளிருக்கும் வேலை வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. முன்பெல்லாம் தமிழ்நாட்டில் பெரிய தொழிற்சாலைகள் சென்னையை சுற்றிலுமே தொடங்கப்பட்டு வந்தன. ஆனால் மு.க.ஸ்டாலின் தமிழ்நாட்டில் தொடங்கப்படும் தொழில்களெல்லாம் பரவலாக அனைத்து மாவட்டங்களிலும் தொடங்கப்படவேண்டும், தொழில் வளர்ச்சி என்பது அனைத்து மாவட்டங்களிலும் ஏற்படவேண்டும் என்பதையே லட்சியமாக கொண்டு செயல்பட்டு வந்தார்.

அதனால் தான் இப்போது டைடல் பூங்காக்கள் பல இடங்களில் தொடங்கப்படுகின்றன. அரசு மட்டுமல்லாமல் தனியாரும் இப்போது தமிழ்நாட்டில் மூலை முடுக்கிலெல்லாம் ஏன் குக்கிராமங்களில் கூட தொழில் தொடங்கி அங்குள்ள இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்கி வருகிறார்கள். எடுத்துக்காட்டாக இந்திய பணக்காரர்களில் 46வது நபராக இருக்கும் ஜோகோ மென்பொருள் நிறுவனத்தின் நிறுவனரான ஸ்ரீதர் வேம்பு தென்காசியை அடுத்துள்ள மத்தளம்பாறையில் தலைமை அலுவலகம் அமைத்து 700 பேருக்கு மேல் வேலை வாய்ப்பை வழங்கியுள்ளார். அந்த பகுதியில் உள்ள இளைஞர்கள் மென்பொருள் நிறுவனத்தில் வேலை பார்க்கும் பெருமைமிகு வாய்ப்பை கொடுத்துள்ளார்.

இதுபோல சமீபத்தில் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடந்த அமைச்சரவை கூட்டத்தில் ரூ.38 ஆயிரத்து 698 கோடி மதிப்பிலான 14 புதிய தொழில் முதலீடுகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 46 ஆயிரத்து 931 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும். இந்த தொழில் நிறுவனங்களுக்கு தமிழக அரசு வழங்கும் சலுகைகள், ஊக்கங்களுக்கும் அமைச்சரவை கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இந்த 14 தொழில்களும் ஓரிரு துறைகளை சார்ந்த தொழிலாக அமையாமல் மின்னணு துறையை சார்ந்த குறைந்த மின்னழுத்த பேனல்கள், செல்போன் தயாரிப்புக்கான உதிரி பாகங்கள், பயணிகள் சொகுசு வாகன உற்பத்தி, மோட்டார் வாகன உதிரிபாகங்கள், உயர் தொழில்நுட்ப உதிரி பாகங்கள், மென்பொருட்கள், பாதுகாப்பு துறைக்கான உபகரணங்கள், மருத்துவ துறையை சார்ந்த ஊசி மருந்துகள் மற்றும் இதர மருந்து பொருட்கள், தோல் அல்லாத காலணி உற்பத்தி, எரிசக்தி துறையை சார்ந்த பசுமை ஹைட்ரஜன், பசுமை அமோனியா உற்பத்தி, மின் வாகனங்கள், தொலைதொடர்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு குறித்த தொழிற்சாலைகள் அரியலூர், ராணிப்பேட்டை, காஞ்சீபுரம், கிருஷ்ணகிரி, தூத்துக்குடி, விருதுநகர், நெல்லை, ராமநாதபுரம், செங்கல்பட்டு, கோவை, திருவண்ணாமலை, சென்னை ஆகிய 12 மாவட்டங்களில் விரைவில் அமைய இருக்கின்றன. ஆக தமிழ்நாட்டின் பரவலான வளர்ச்சிக்கு இந்த முதலீடுகள் அடிகோலியுள்ளது.

# மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



**கடலூர், நவ. 5-**

கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாடு அரசின் உத்தரவின்படி, பொதுமக்களின் குறைகளை களைவதற்காகவும், பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று உரிய விசாரணை மேற்கொண்டு, தகுதியான பயனாளிகளுக்கு அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்காகவும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் நடைபெற்று வருகிறது.

இன்றைய கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து 462 மனுக்கள் பெறப்பட்டன. பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி தகுதியான மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார்.

இன்றையதினம், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக்கழகம் (தாட்கோ) வாயிலாக செயல்படுத்தப்படும் பொருளாதார மேம்பாட்டுத்திட்டங்களின் மூலம் 15 பயனாளிகளுக்கு ரூ.9.3 லட்சம் மதிப்பீட்டில் மானியத்திற்கான ஆணையை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ராஜசேகரன், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் மதிராணி, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் லதா, மாவட்ட தாட்கோ மேலாளர் லோகநாதன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# கோவையில் ஒன் பாப் பிலாட்டீஸ் நல மையம் துவக்கம்




**கோவை, நவ. 5-**

கோவை ரேஸ்கோர்ஸ் பகுதியில் முதன் முறையாக முதியோரின் உடல் நலனை மேம்படுத்தும் வகையில், ஒன் பாப் பிலாட்டீஸ் நல மையம் துவக்கம். இம்மையத்தை 87 வயது முதியவர் குருசாமி தொடங்கி வைத்தார்.

இதுகுறித்து ஒன் பாப் நிறுவனர் சஞ்சனா மகேஷ் கூறுகையில், "இந்தியாவில் தற்போது நடைபயிற்சி மட்டுமே முதியவர்களுக்கான உடற்பயிற்சி என்ற நிலை மாறி, பிலாட்டீஸ் பயிற்சியை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளனர். தொழில்நகரான கோவையில் முதியோர் எண்ணிக்கை அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு இந்த பயிற்சி மையம் தொடங்கப் பட்டுள்ளது.

இந்த மையம் தினமும் காலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை செயல்பட உள்ளது. திறப்பு விழா சலுகையாக வரும் 10ம் தேதி வரை கட்டணத்தில் 25% தள்ளுபடி வழங்கப்படும்" இவ்வாறு சஞ்சனா மகேஷ் கூறினார்.

இதுகுறித்து ஆலோசகர் ஜெயாமகேஷ் கூறுகையில், "முதியோர் நலன் சார்ந்த இத்தகைய பயிற்சி மையங்கள் மேலை நாடுகளில் செயல்பட்டு வருகின்றன. இந்தியாவில் இம்மையங்கள் தற்போது தொடங்கப்பட்டு வரும் நிலையில், கோவையில் இறக்குமதி செய்யப்பட்ட பிரத்தியேக இயந்திரங்களுடன் ஒன் பாப் மையம் தொடங்கப் பட்டுள்ளது. அதோடும், நாங்கள் அளிக்கும் பயிற்சிக்கு பி.எஸ்.எஸ் அனுமதி வங்கியுள்ளது." என்றார்.

# பேரிடர் மீட்பு குழுவினருடன் ஆட்சியர் ஆலோசனை




திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வடகிழக்கு பருவமழை மற்றும் பேரிடர் காலங்களில் ஏற்படும் இடர்பாடுகளிலிருந்து மக்களை மீட்பது தொடர்பான ஒத்திகை பயிற்சிகள் நடத்துவது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் கார்த்திகேயன் தேசிய பேரிடர் மீட்பு குழுவினர் மற்றும் துறைசார்ந்த அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார்கள். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சுகன்யா, துணை கமாண்டன்ட் கபில்.

# புதுச்சேரி காங்கிரஸ் கட்சியினர் கேரளா வயநாடு தொகுதியில் பிரச்சாரம்



**புதுச்சேரி, நவ. 5-**

வயநாடு தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் பிரியங்காவிற்கு ஆதரவாக புதுச்சேரி காங்கிரஸ் தலைவர்கள், நிர்வாகிகள் தீவிர ஓட்டு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

வயநாடு எம்.பி., பதவியை ராகுல் ராஜினாமா செய்ததால் காலியாக உள்ள அந்த தொகுதிக்கு வரும் 13ம் தேதி இடைத்தேர்தல் நடக்கிறது. இதில் காங்கிரஸ் வேட்பாளராக பிரியங்கா போட்டியிடுகின்றார். அவர் வயநாட்டில் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

இந்நிலையில், காங்கிரஸ் வேட்பாளர் பிரியங்காவை ஆதரித்து புதுச்சேரியில் இருந்து காங்கிரஸ் மாநில தலைவர் வைத்திலிங்கம் எம்பி., முன்னாள் முதலமைச்சர் நாராயணசாமி, காங்கிரஸ் சட்டசபை கட்சி தலைவர் வைத்தியநாதன், மாகி எம்.எல்.ஏ., ரமேஷ் பரம்பத் தலைமையில் மாநில நிர்வாகிகள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர். நேற்று வயநாடு மார்க்கெட் பகுதியில் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் வாக்குறுதிகள் அடங்கிய துண்டு பிரசுரங்களை வழங்கி ஓட்டு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

# கோவிந்தப்பேரி ஊராட்சியில் துப்புரவு பணியாளருக்கு பணி நிறைவு பாராட்டு



**தென்காசி, நவ. 5-**

தென்காசி மாவட்டம் கோவிந்தப் பேரி ஊராட்சியில் துப்புரவு பணியாளராக பணி புரிந்த கமலம் என்பவர் பணி நிறைவு பெற்றார். இதனையொட்டி பணி நிறைவு விழா நடைபெற்றது. கோவிந்தப் பேரி ஊராட்சி மன்ற தலைவர் டிகே பாண்டியன் தலைமையில் நடைபெற்ற விழாவில் பரிசு பொருட்கள் வழங்கி, சந்தன மாலை மற்றும் பொன்னாடை அணிவித்து சிறப்பு செய்யப்பட்டது. நிகழ்ச்சியில் வட்டார வளர்ச்சி அலுவலர் ராமநாதன், துரைப் பாண்டியன் மாரித்துரை, சிவா, கிருஷ்ணன், ஜோதி, கல்யாணி சுந்தரம் மற்றும் ஊராட்சி பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

# அரசின் சாதனைகள் புகைப்பட கண்காட்சி



ஈரோடு ஊராட்சி ஒன்றியம் கதிரம்பட்டி ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்ட தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த புகைப்படக் கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# புதுச்சேரி வீராம்பட்டினத்தில் ரூ.46.16 கோடியில் மீன்பிடி துறைமுகம்

## முதலமைச்சர் ரங்கசாமி அடிக்கல் நாட்டினார்



**புதுச்சேரி, நவ. 5-**

புதுச்சேரி வீராம்பட்டினத்தில் 46.16 கோடி ரூபாய் மதிப்பில், மீன்பிடி துறைமுகம் கட்டுமானம் மற்றும் விரிவாக்க பணியை முதலமைச்சர் ரங்கசாமி அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்.

அரியாங்குப்பம்தொகுதி சாமிநாத நாயக்கர் வீதி, சுப்புராய பிள்ளை வீதி, பூரணாங்குப்பம் வீதி உள்ளிட்ட இடங்களில் சாலையை மேம்படுத்த, பொதுப்பணித்துறை மூலம் ரூ. 2.60 கோடிக்கான பணியை முதலமைச்சர் ரங்கசாமி நேற்று துவக்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியை தொடர்ந்து, பொதுப்பணித்துறை கட்டிடங்கள் மற்றும் சாலை (தெற்கு) கோட்டத்தின் மூலம், வீராம்பட்டினம் மீனவ கிராமம், தேங்காய்திட்டு, (அரிக்கன்மேடு) பகுதியில், மத்திய அரசு நிதி வழங்கும் திட்டம் (சி. எஸ்.எஸ்.,) பிரதமரின் மீன்வள மேம்பாட்டு திட்டத்தின் கீழ், 53.38 கோடி ரூபாய் அனுமதி பெறப்பட்டு 46.16 கோடியில் மீன் பிடி துறைமுகம் கட்டுமானம் மற்றும் விரிவாக்க பணியை முதலமைச்சர் ரங்கசாமி அடிக்கல் நாட்டினார்.

நிகழ்ச்சியில் பொதுப்பணித்துறை அமைச்சர் லட்சுமி நாராயணன், பாஸ்கர் எம்.எல்.ஏ., ஆகியோர் முன்னிலைவகித்தனர். பொதுப்பணித்துறை தலைமை பொறியாளர் தீனதயாளன், கண்காணிப்பு பொறியாளர் வீரசெல்வம், செயற்பொறியாளர் சந்திரகுமார், பாலசுப்ரமணியன், உதவி பொறியாளர் கோபி, இளநிலைப் பொறியாளர் பிரபாகர் உட்பட என்.ஆர்., காங்கிரஸ் நிர்வாகிகள், வீராம்பட்டினம் பஞ்சாயத்து, முக்கியஸ்தர்கள், பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர்.

# ராயல் மருத்துவமனைக்கு அங்கீகாரம்




**கோவை, நவ. 5-**

கோவை நீலாம்பூர் பகுதியில் இயங்கி வரும் ராயல் கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை அண்மையில் நரம்பியல் அறுவை சிகிச்சையில் சிறந்த விளங்கும் மருத்துவ மையமாக யு.எஸ்.ஏ. சர்ஜிகல் ரிவியூ கார்ப்பரேஷனின் எஸ்ஆர்.சி. அங்கீகாரத்தை பெற்றது. அதனைத்தொடர்ந்து ராயல் கேர் மருத்துவமனையின் தலைவர் டாக்டர் க.மாதேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் கூறுகையில், ராயல் கேர் மருத்துவமனை அனைத்து நோயாளிகளுக்கும் தரமான சிகிச்சையை மேம்படுத்துவதற்கும், தரமான சிகிச்சையை வழங்குவதற்கும் அர்ப்பணிப்புடன் உள்ளது என்பதை அறிவிப்பதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம்“ என மருத்துவமனையின் தலைவர் டாக்டர் க.மாதேஸ்வரன் கூறினார். மேலும், அவர் கூறுகையில், “ராயல் கேர் மருத்துவமனைக்கு கிடைத்திருக்கும் அங்கீகாரம் நரம்பியல் அறுவை சிகிச்சையில் துறையில் மிகச் சிறந்த மற்றும் மேம்படுத்தப்பட்ட மருத்துவ சேவை வழங்கி வருகிறது என்பதை தெரிவித்தார். ராயல் கேர் மருத்துவமனையின் தலைவர் மற்றும் நரம்பியல், முதுகெலும்பு அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர். க. மாதேஸ்வரன், நரம்பியல் அறுவை சிகிச்சையில் முதுகலை அறுவை சிகிச்சை நிபுணராக அங்கீகாரம் மற்றும் சான்றிதழ் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர்கள் டாக்டர். கே. ரகுராஜ பிரகாஷ் மற்றும் டாக்டர். ஆர். செந்தில்குமார் ஆகியோர் நரம்பியல் அறுவை சிகிச்சையில் சிறந்த அறுவை சிகிச்சை நிபுணர் என்ற அங்கீகாரம் பெற்றுள்ளனர். மற்றும் சான்றிதழ் பெற்றுள்ளனர்.

# தஞ்சையில் செவிலியர்கள் ஆர்ப்பாட்டம்




**தஞ்சாவூர், நவ. 5-**

தஞ்சாவூர் மாவட்ட தமிழ்நாடு எம்.ஆர்.பி செவிலியர்கள் மேம் பாட்டுச் சங்கம் சார்பில் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நேற்று மாலை திருச்சியில் பணிமுடித்து வீட்டிற்கு சென்ற செவிலியர் மீது கொலை வெறி தாக்குதல் நடத்திய வன் மீது கடும் நடவடிக்கை மேற்கொள் ளவும், ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளிட்ட மருத்துவமனை களில் பணி செய்யும் செவிலியர்களுக்கு தகுந்த பாதுகாப்பு வழங்கிடவும், மேலும் காவல் பணிக்கு தகுதியான இரவு காவலர்கள் நியமிக்க வலியுறுத்தியும் தமிழ்நாடு எம்ஆர்பி செவிலியர் மேம்பாட்டுச் சங்கம் சார்பாக பெருந்திரள் ஆர்ப்பாட்டம் மாவட்ட தலைவர் செவிலியர் சாந்தி தலைமையில் நடைபெற்றது. ஜிழிநிணிகி மாவட்ட தலைவர் செந்தில்குமார் துவக்க உரையாற்றி கண்டன ஆர்ப்பாட்டத்தை தொடங்கி வைத்தார்.

இதில் செவிலியர் ஆர் ரஷ்யா, தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் ரவிச்சந்திரன், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட இணைச் செயலாளர் ரமேஷ், அரசு ஊழியர் ஓய்வூதியர் சங்க மாவட்ட தலைவர் தமிழ்வாணன், தமிழ்நாடு வனத்துறை பணியாளர் சங்க மாநில செயலாளர் தமிழ்மாறன், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க திருச்சி மாவட்ட செயலாளர் பாபு, தஞ்சை தெற்கு வட்ட செயலாளர் ராகவேந்திர பிரவீன், தமிழ்நாடு வனத்துறை பணியாளர் சங்க மாநில செயலாளர் தமிழ்மாறன், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட இணைச் செயலாளர் வெங்கடேசன், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கும்பகோணம் வட்டச் செயலாளர் பிரபாகரன், தமிழ்நாடு சாலை ஆய்வாளர் சங்க மாவட்ட செயலாளர் ராதாகிருஷ்ணன், தமிழ்நாடு அரசு உயர் சங்க பூதலூர் வட்டச் செயலாளர் சந்திரசேகரன் உள்ளிட்ட துறை வாரி சங்கங்களின் தோழர்கள் கண்டன உரை நிகழ்த்தி னார்கள். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில செயலாளர் கோதண்ட பாணி நிறைவுரையாற்றி னார். தனஆரோக்கியமேரி நன்றியுரை ஆற்றினார்.

ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரிடத்தில் தஞ் சாவூர் மாவட்டத்தில் செவிலியர்கள், மருத்துவ பணியாளர்கள் பாதுகாப்பு வழங்கவும், இரவு காவலர் நியமிக்கவும் வலியுறுத்தி கோரிக்கை மனு வழங்கப்பட்டது.

# அரசு கல்லூரிக்கு இட ஒதுக்கீட்டின் கீழ் தேர்வாகியுள்ள 14 மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள்

## அமைச்சர் நமச்சிவாயம் வழங்கல்

**புதுச்சேரி, நவ. 5–**

அரசு பள்ளி மாணவர்களுக்கான இட ஒதுக்கீட்டின் கீழ் இந்திரா காந்தி அரசு மருத்துவக் கல்லூரிக்கு தேர்வாகியுள்ள மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.

புதுச்சேரி அரசு அனைத்து ஆசிரியர்கள் ஒருங்கிணைந்த சங்கம் சார்பில், அரசு பள்ளி மாணவர்களுக்கான இட ஒதுக்கீட்டின் கீழ், இந்திரா காந்தி அரசு மருத்துவக் கல்லூரியில், 2024–25ம் கல்வியாண்டிற்கு 14 மாணவர்கள் தேர்வாகியுள்ளனர்.



இம்மாணவர் களை ஊக்குவிக்கும் வகையில், மாணவர்களுக்கு முதலாம் ஆண்டு மருத்துவ பாடப் புத்தகம் வழங்கும் நிகழ்ச்சி கல்வித்துறை வளாகத்தில் நடந்தது. நிகழ்ச்சிக்கு, கல்வித்துறை அமைச்சர் நமச்சிவாயம் தலைமை தாங்கி, மாணவர்களுக்கு கல்வி உபகரணங்களை வழங்கினார்.

கல்வித்துறை இயக்குனர் பிரியதர்ஷினி, இணை இயக்குனர் சிவகாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் சங்கத் தலைவர் செந்தில்குமார், பொதுச் செயலாளர் மூர்த்தி பூங்குன்றன், பொருளாளர் ஜவஹர்லால் நேரு, தலைமையாசிரியர் பிரிவு தலைவர் பால முருகன், துணைத்தலைவர் பிரபு கணேஷ், தொடக்கப் பள்ளி ஆசிரியர் பிரிவு தலைவர் சிவப்பிரகாசம், இணை பொதுச் செயலாளர் வாழ்முனி மற்றும் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். கடந்தாண்டும் இதேபோல் அரசு மருத்துவக் கல்லூரியில் தேர்வு பெற்ற மாணவர் களுக்கு கல்வி உபகரணங் கள் வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# தென்காசியில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்



**தென்காசி, நவ. 5–**

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல்கிஷோர் தலைமையில் நடைபெற்றது. மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் பெற்றுக்கொண்டார்.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் 1 மாற்றுத்திறனாளிக்கு ரூ.13,500 மதிப்பிலான மூன்று சக்கர சைக்கிளை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.

மேலும், இக்கூட்டத்தில் இலவச வீட்டுமனை பட்டா, முதியோர் உதவித் தொகை, அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி தரக்கோருதல், பட்டா மாறுதல், மாற்றுத் திறனாளிகள் உதவித்தொகை மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 388 மனுக்கள் பெறப்பட்டது. பெறப்பட்ட மனுக்கள் தகுதி வாய்ந்த மனுக்களாக உள்ளதா என்பதை விசாரணை செய்து விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு மனுதாரர்களுக்கு உரிய பதில் அளிக்குமாறு சம்பந்தப்பட்ட அனைத்து துறை அலுவலர்களுக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல் கிஷோர் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன், வருவாய் கோட்டாட்சியர்கள் லாவண்யா (தென்காசி), கவிதா (சங்கரன் கோவில்), மாவட்ட ஊரகவளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மைக்கேல் அந்தோணி பெர்னாண்டோ, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மு.முருகானந்தம், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் ஜெயப்பிரகாஷ், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் முத்துராமலிங்கம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்) செல்வக்குமார், துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத்திட்டம்) ஷேக் அயூப் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# அண்ணாமலைப் பல்கலைக்கழக வணிகவியல் துறை முன்னாள் மாணவர்கள் சந்திப்பு

**சிதம்பரம், நவ. 5–**

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழக வணிகவியல் துறையில் 1976 –79ல் பயின்ற முன்னாள் மாணவர்கள் சந்திப்பு வணிகவியல் துறையில் நடைபெற்றது. இதில் பல்கலைக்கழக துணைவேந்தர் முதுமுனைவர் இராம. கதிரேசன் புதுப்பிக்கப்பட்ட விரிவுரை அரங்கத்தை திறந்து வைத்து சிறப்பு உரையாற்றினார். கல்விக்குழு உறுப்பினரும், வணிகவியல் துறைத் தலைவருமான முனைவர் பத்மநாபன் வரவேற்புரையாற்றினார்.





கலைப்புல முதல்வர் முனைவர் விஜயராணி தலைமையுரையாற்றினார். முன்னாள் மாணவர்கள் சங்க இயக்குநரும், பொறியியல்புல முதல்வருமான முனைவர் கார்த்திகேயன் வாழ்த்துரை வழங்கினார். இதில் முன்னாள் மாணவர்கள் முனைவர் சசிகலா, நல்லாசிரியர் திருநாவுக்கரசு, குருநாதன் ஆகியோர் தங்கள் கருத்துக்களை பகிர்ந்துகொண்டனர். இந்நிகழ்வில் முன்னாள் மாணவர்கள் 40க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டார்கள். மேலும், இவர்கள் ரூ.4 லட்சம் மதிப்பிற்கு வணிகவியல் துறையில் இரண்டாம் தளத்திலுள்ள விரிவுரை அரங்கத்தை புதுப்பித்து துறைக்கு அர்ப்பணித்தார்கள். முன்னாள் வணிகவியல் துறைத்தலைவர் முனைவர் வசந்தி நன்றியுரையாற்றினார். இதில் வணிகவியல் துறை பேராசிரியர்கள், முன்னாள் தொலைதூர கல்வி இயக்கக இயக்குனர் முனைவர் ஆறுமுகம், தொலைதூர மற்றும்இணையவழி கல்வி மைய இயக்குனர் முனைவர் சீனிவாசன், தத்துவவியல் துறைத்தலைவர் முனைவர் திருமால், மேலாண்மை துறைத்தலைவர் முனைவர் அருள், நெறிமுறை அலுவலர் முனைவர் ரவிச்சந்திரன், முன்னாள் வணிகவியல் துறைத்தலைவர் முனைவர் இளங்கோவன், துணைவேந்தரின் நேர்முக செயலர் முனைவர் பாக்கியராஜ், மக்கள் தொடர்பு அதிகாரி ரெத்தினசம்பத் ஊழியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர்.

# மக்களை தேடி மாவட்ட கலெக்டர் நிகழ்ச்சியை பொதுமக்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்

## கலெக்டரின் செயலர் அறிவிப்பு

**கரைக்கால், நவ. 5–**

மக்களை தேடி மாவட்ட கலெக்டர் நிகழ்ச்சியின் ஒருபகுதியாக, பட்டா பெயர் மாற்றம், நவம்பர் 7ஆம் தேதி திருநள்ளாறில் நடைபெற உள்ளதால் பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டுகிறோம் என கலெக்டரின் செயலர் பொன் பாஸ்கரன் அறிவித்துள்ளார்.

காரைக்கால் மாவட்ட கலெக்டரின் செயலர் பொன்பாஸ்கர் இதுகுறித்து வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது: காரைக்கால் மாவட்டம் திருநள்ளாறு மற்றும் நெடுங்காடு கொம்யூன் பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள், தங்களுடைய இடத்திற்கு பட்டா பெயர் மாற்றம் கேட்டு திருநள்ளாறு வட்டாட்சியர் அலுவலகத்தில் விண்ணப்பித் திருப்பவர்கள், வரும் வியாழக்கிழமை (07.11.2024 காலை 10 மணி முதல் மத்தியம் 1 மணிவரை) அன்று திருநள்ளாறு ஸ்ரீ தர்ப்பாரண்யேஸ்வரர் சுவாமி தரிசன வரிசை மற்றும் காத்திருப்பு வளாகத்தில் நடைபெறவிருக்கும் சிறப்பு முகாமில் கலந்து கொண்டு, பட்டா மாற்றம் குறித்த சந்தேகங்களை தெரிந்து கொள்ளலாம். மேலும் தங்களுடைய இடத்திற்கான பட்டாவினை பெயர் மாற்றமும் செய்து கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது. பட்டா மாற்றுவதற்கான முகாமில் புகைப்படம் ஒட்டப்பட்ட மனு, பத்திர பதிவு ஆவணங்கள். மூலப்பத்திரங்கள்.

1969லிருந்து இன்றைய நாள் வரையிலான வில்லங்க சான்றிதழ். தற்பொழுது உள்ள பட்டா நகல், ஆதார் அட்டை நகல், வருவாய் அதிகாரிகள் தேவை எனக் கருதும் தொடர்புடைய ஆவணங்கள். மேலே உள்ள அனைத்தும் சுய கையொப்பமிட்டு சமர்பிக்க வேண்டும். சரியான ஆவனங்கள் சாமர்ப்பிக்கும் பட்சத்தில் அன்றையதினமே பட்டா மாற்றி தரப்படும் என தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு அந்த செய்தி குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# மாற்றுத்திறனாளிகளிடம் மனுக்களை பெற்ற ஆட்சியர்



**மதுரை, நவ. 5–**

மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடந்த குறைதீர்க்கும் நாளில் மாற்றுத்திறனாளிகள் பொதுமக்களிடம் மாவட்ட ஆட்சியர் சங்கீதா மனுக்களை பெற்றுக்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து மதுரை மாவட்டத்தில் பொருளாதாரத்தில் பின் தங்கியுள்ள சிறுபான்மையினர் இன மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலமாக தனிநபர் கடன், சுயஉதவி குழுக்களுக்கான சிறு தொழில் கடன், கைவினை கலைஞர்களுக்கு கடன், கல்விக் கடன் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மேற்படி கடன் தொகை பெற விண்ணப்பதாரர் 18 வயது முதல் 60 வயது உடையவராக இருத்தல் வேண்டும். ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு மட்டுமே கடனுதவி வழங்கப்படும். இக்கடன் பெற விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரரின் ஆண்டுவருமானத்தின் அடிப்படையில் திட்டம் 1 மற்றும் திட்டம் 2ன்படி கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரையில் திட்டம் 1ல் கீழ் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரரின் ஆண்டு வருமானம் கிராமப்புறமாயின் ரூ. 98,000ம், நகர்ப்புறமாயின் ரூ.1,20,000ம் என இருந்து வந்த நிலையில் தற்போது கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறங்களில் வசிக்கும் அனைவருக்கும் ஆண்டு வருமானம் ரூ.3,00,000 என உயர்த்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டுவருமான உயர்வு 01.10.2024 முதல் அமலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

எனவே, இத்திட்டத்தின் கீழ் கடன் பெற விரும்புவோர் விண்ணப்பத்துடன் சாதிச்சான்று, வருமானச் சான்று, இருப்பிடச்சான்று, ஆதார் அட்டை நகல் மற்றும் திட்ட தொழில் அறிக்கையுடன் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலத்தில் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம், மதுரை மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் அலுவலகம், அனைத்து மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் அதன் கிளைகள், நகர கூட்டுறவு வங்கி, தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றில் விண்ணப்பங்களை சமர்ப்பித்து பயன்பெறலாம் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் சங்கீதா தெரிவித்துள்ளார்.

# தென்காசி மாவட்டத்தில் டாக்டர் அம்பேத்கர் விருது பெற விண்ணப்பிக்கலாம்

## ஆட்சியர் கமல் கிஷோர் தகவல்

**தென்காசி, நவ. 5–**



தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்காக பலர் அரிய தொண்டாற்றி வருகிறார்கள். ஆதிதிராவிடர்களின் முன்னேற்றத்திற்காக தங்களை இணைத்துக் கொண்டு அவர்கள் ஆற்றி வரும் அரிய தொண்டுகளை கருத்தில் கொண்டு தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவருக்கு ஆண்டுதோறும் டாக்டர் அம்பேத்கர் விருது வழங்கி தமிழ்நாடு அரசு சிறப்பித்து வருகிறது.

அவ்வகையில் 2025ஆம் ஆண்டு திருவள்ளுவர் திருநாளன்று டாக்டர் அம்பேத்கர் விருது பெற விரும்புவோர் தங்களைப் பற்றிய முழு விவரங்களுடன் விண்ணப்பிக்கலாம்.

இவ்விருதுக்கான விண்ணப்ப படிவத்தை தென்காசி மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் 11.11.2024க்குள் தென்காசி மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல் கிஷோர் தெரிவித்துள்ளார்.

# வட மாநிலங்களில் சத் பூஜை கொண்டாட்டம் தொடக்கம்

**புதுடெல்லி, நவ. 5–**

சத் பூஜை என்பது உத்தரபிரதேசம், பீகார், மத்திய பிரதேசம் மற்றும் மேற்கு வங்கம் உள்ளிட்ட மாநிலங்களில் முக்கியமாக கொண்டாடப்படும் பண்டிகை ஆகும்.

இது சூரிய கடவுளின் வழிபாட்டுக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. உண்ணா நோன்பு, சூரியனுக்கு பிரார்த்தனை செய்தல், புனித நீராடல் மற்றும் தண்ணீரில் நின்று தியானம் செய்தல் உள்ளிட்ட 4 நாள் சடங்குகளை உள்ளடக்கியது.

இந்த ஆண்டுக்கான சத் பூஜை இன்று தொடங்கி வருகிற 8ந்தேதி வரை 4 நாட்கள் நடைபெறுகிறது.

இன்று பக்தர்கள் நதிக்கரை, கடல் அல்லது நீர் நிலைகளில் நீராடி உணவை எடுத்துக்கொள்கிறார்கள். 2வது நாள் உண்ணா நோன்பு கடைப்பிடிக்கப்படுகிறது.

3வது நாளில் சூரிய உதயத்திற்கு முன்பே நீர் நிலைகளில் திரளும் பக்தர்கள் இடுப்பளவு தண்ணீரில் நின்று கொண்டு பக்தி பாடல்களை பாடி பிரார்த்தனை செய்வார்கள். இதையொட்டி டெல்லியில் வருகிற 7ந்தேதி பொது விடுமுறை அளிக்கப்படுகிறது.

# மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



**கன்னியாகுமரி, நவ. 5–**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா தலைமையில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள்கூட்டத்தில், பொதுமக்களிடமிருந்து கல்விஉதவித் தொகை, பட்டா பெயர் மாற்றம், மாற்றுத்திறனாளி நலஉதவித்தொகை, முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, குடிநீர் வசதி, சாலைவசதி உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் கோரி 284க்கும் மேற்பட்ட கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது. பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட அனைத்து கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து தீர்வுகாணுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

அதனைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 6 பயனாளிகளுக்கு மூன்று சக்கர நாற்காலிகளும், 2024ம் ஆண்டு அகில இந்திய தொழிற்தேர்வில் தமிழக அளவில் கடைசலர் பிரிவில் முதலாம் இடம் பிடித்த கோணம் அரசினர் தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியாளர் செல்வன் அரவிந்த்துக்கு பாராட்டு சான்றிதழ்களை வழங்கி, வாழ்த்தினார்கள்.

நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் பாலசுப் பிரமணியம், பத்மநாபபுரம் உதவி ஆட்சியர் வினய்குமார் மீனா, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பாபு, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) சேக்அப்துல்காதர், நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் காளீஸ்வரி, கூடுதல் உதவி காவல்கண்காணிப்பாளர் மதியழகன், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# சத்தியமங்கலம் புலிகள் காப்பகம் பகுதியில் இயற்கை முகாம்




ஈரோடு, நவ. 5-

ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால்சுன்கரா உத்தரவிற்கிணங்க, தமிழ்நாடு அரசு, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் துறையின் சார்பில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்வாக சத்தியமங்கலம் புலிகள் காப்பகம் பகுதியில் உள்ள ஆசனூர் மற்றும் தலமலைப் பகுதிகளில் 3 நாட்கள் இயற்கை முகாம் நடைபெற்றது.

பள்ளி மாணவர்களை வகுப்பறைக்கு வெளியில் இருக்கும் சுற்றுச்சூழலுடன் தங்களுடைய தொடர்பைப் பற்றி நேரடியாக அறிந்துகொள்வதற்கான வாய்ப்புகளை இயற்கை முகாம் திட்டம் மூலம் வழங்கப்படுகிறது. இம்முகாமில் 7 அரசு மேல்நிலைப் பள்ளி மற்றும் 3 உயர்நிலைப் பள்ளிகளில் உள்ள ழிநிசி/ணிசிளி மன்றத்தைச் சார்ந்த 48 மாணவர்கள், 10 பள்ளி ஆசிரிய ஒருங்கிணைப் பாளர்கள் கலந்துகொண்டனர். மாணவர்கள் அரேப் பாளையம் விசீஸிகிஞிகிவில் 3 நாட்கள் முகாமிட்டு இருந்தனர்.

முதல்நாள் நிகழ்வாக MYRADAவில் சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தின் இணை இயக்குநர் சுதாகர் முகாமினை துவக்கி வைத்து, பூமி தோன்றியது முதல் மனிதன் தோன்றிய வரலாறுகளை மாணவர்களுக்கு எடுத்துக்கூறினார். மேலும், மனிதனுக்கு முன்பே இப்பூமியில் மற்ற அனைத்து உயிரினங்களும் வாழ்ந்து வந்தது குறித்தும், மனிதன் தோன்றிய பிறகு அனைத்து உயிரினங்களுக்கும் ஆபத்தை விளைவித்துக் கொண்டுள்ளது குறித்தும், பாக்டீரியா முதல் நீலத்திமிங்கலம் வரை உயிரி பன்மயங்கள் இல்லையெனில் மனிதன் இப்புவியில் உயிர்வாழ முடியாது என்றும் எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாணவர்களுக்கு வனங்களின் அழகு, வனவிலங்குகளின் முக்கியத்துவம், வாழிடம், உணவுமுறை, மலைப் பகுதிகளில் பேருந்தில் பயணிக்கும் பொழுது கடைபிடிக்க வழிமுறைகள், காடுகளை தூய்மையாக வைத்திருப்பதன் அவசியத்தையும் மற்றும் கொண்டை ஊசி வளைவுகள் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது. மேலும், இம்முகாமில் மாணவர்களுக்கு கிழக்கு தொடர்ச்சிமலை, மரங்கள், புறா, சிறுத்தை, யானை, செந்நாய், மான், குரங்கு போன்ற விலங்குகளின் வாழிடங்களைப் பற்றி எடுத்துரைக்கப்பட்டது. மாணவர்கள் கிழக்குத் தொடர்ச்சி மலையில் இருந்து சத்தியமங்கலம் சமவெளிப்பகுதி, பவானிசாகர் அணைக் கட்டுப் பகுதிகளைக் கண்டு ரசித்தனர். மேலும், ஆசனூர், காராப்பள்ளம் வேட்டைத்தடுப்பு முகாமிற்குச் சென்று அங்குள்ள watch tower மேல் ஏறி மேற்குத் தொடர்ச்சி மலை, சத்திய மங்கலம் சமவெளிப்பகுதி, சோலார் உதவியுடன் இயங்குகின்ற விளக்குகளையும், குடிநீர்வசதிகளை பற்றியும் மாணவர்கள் அறிந்துகொண்டனர். காட்டு விலங்குகளுக்காக கோடை காலங்களில் குடிநீருக்காக அமைக்கப் பட்டிருந்த குடிநீர்தொட்டிகளை பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது. வனசோதனைசாவடி பணிகள் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற ஆணையின் படி, வெளிநாட்டு தாவரங்களை வனப்பகுதிகளில் அகற்றவும், (சென்னா களைச்செடிகள்) அவற்றின் முக்கியத்துவம் குறித்தும் விளக்கம்அளிக்கப்பட்டது.

இரண்டாம்நாள் இயற்கைமுகாமானது விசீஸிகிஞிகிவில் நடைபெற்றது. இம்முகாமில் மாணவர்களுடன் பசுமைபடையின் நோக்கம் மரங்களின் பயன்கள், மழைநீர் எவ்வாறு கிடைக்கிறது என்பது குறித்து கலந்துரையாடி, துணிப்பைகளை பயன்படுத்துவதன் அவசியத்தை எடுத்துகூறி மாணவர்களுக்கு துணி பைகள் வழங்கப்பட்டது. மேலும், பல்லுயிர் உயிர்சூழல் மற்றும் பல்லுயிர் பெருக்கம் குறித்து மாமிச உண்ணிகள், (புலி, சிறுத்தை, கழுதைப்புலி,) வாழ்விடம், அதன் வாழ்வியல் முறைபற்றி வனத்தில் சொல்லியவிதம் எங்கள் வாழ்வில் நாங்களும் வனத்துறை பணியில் சேர்ந்து வளரும் தலைமுறைக்கு இந்த இயற்கையோடு சேர்ந்து பணியாற்ற வேண்டும் என் தூண்டுதல் உருவானது. மனிதவிலங்கு மோதல்கள் காரணங்கள் அதற்கான நிவாரணங்கள் மற்றும் தீர்வுகள் குறித்து மாணவடன் கலந்துரையாடப்பட்டது. சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில் வனவிலங்குகள் வாழ்வியல் மறைமுக அடையாளங்களை கொண்டு விலங்குகளை அடையாளம் காணுதல் முக்கியத்துவம் மற்றும் காடுகளுக்கும் விலங்குகளுக்கும் உள்ள பிணைப்பு குறித்தும், உயிர்ச்சூழல் மண்டலம் மற்றும் பல்லுயிர் பெருக்கம் குறித்தும் மாணவர்களுக்கு விரிவாக விளக்கிகூறப்பட்டது.

திம்பம் தலைமலை வனச்சாலையில் காடுகளை பார்வையிட்டனர். உயிர் பன்மயத்தில் முக்கியத்துவம் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது.

திப்புசுல்தான் வேட்டை தடுக்கும் முகாமை மாணவர்கள் பார்வையிட்டனர். அங்கிருந்து தெங்குமரஹடா பள்ளத்தாக்கு, மோயாறு மேற்கு மற்றும் கிழக்கு தொடர்ச்சிமலைகளின் சந்திப்பு குறித்து மாணவர்களுக்கு விளக்கி கூறப்பட்டது. அழிவின் விளிம்பில் உள்ள பாருகழுகுகளின் வகைகள் அவற்றை பாதுகாப்பதன் அவசியம் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.

மூன்றாம் நாள் அரேப்பாளையத்திலிருந்து புறப்பட்டு கேர்மாளம் வனச்சரகம் சென்றடைந்தனர். அங்குமாணவர்களுக்கு வனச்சரகத்தின் பணிகள், மோப்பநாய்சோழவின் செயல்பாடுகள், அங்கு உள்ள நாற்றங்கால் உற்பத்தி பணிகள் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது.

மேலும், மாணவர்களுக்கு உணவு சங்கிலி மற்றும் உணவு வலையின் முக்கியத்துவத்தை குறித்து சிலந்தி வலைபோல மாணவர்களுக்கு நூல் கோர்த்து வலை பின்னல் வடிவில் விளையாட்டின் மூலம் செய்து காண்பிக்கப்பட்டது.

மேலும் கேர்மாளம் வனச்சரகத்தில் உள்ள தைலத்தோட்டம், 20 ஹெக்நிலப்பரப்பில் உள்ள புல்தோட்டத்தையும் மாணவர்கள் பார்வையிட்டனர். களைச்செடிகள் அகற்றுதலின் முக்கியத்துவம் குறித்து எடுக்ககூறப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், முதன்மைகல்வி அலுவலர் சுப்பாராவ், மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் கீதா, பசுமைப்படை ஒருங்கிணைப்பாளர் இல.விசயேந்திரன், ஆசனூர் வனவர் குணசேகரன், வனசரகர்கள் சதீஸ், வெங்கடாசலம், கருத்தாளர் தர்மராஜ், உயிரியலாளர் தர்மராஜ் உட்பட தொடர்புடைய துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் நலத்திட்ட உதவி வழங்கல்



நாமக்கல், நவ. 5-

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் உமா தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, கல்வி உதவித்தொகை, இலவச வீட்டு மனைப்பட்டா, வங்கி கடன் உதவி, குடிசை மாற்று வாரிய வீடு, குடிநீர் வசதி, சாலை வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் வேண்டி பல்வேறு கோரிக்கைகள் குறித்து மொத்தம் 347 மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் உமாவிடம் பொதுமக்கள் வழங்கினார்கள். மனுக்களைப் பெற்றுகொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் மனுக்களை பரிசீலினை செய்து உரிய அலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

மேலும், நாமக்கல் மாவட்டம், கொண்டிசெட்டிபட்டியை சேர்ந்த திவ்யா தையல் இயந்திரம் வேண்டி அளித்த மனுவின் அடிப்படையில் உடனடியாக அதிதிராவிடர் நலத்துறை சார்பில் ரூ.6,690 மதிப்பில் தையல் இயந்திரத்தையும், 2 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு அட்டைகள் உள்ளிட்ட அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் அலுவலக தரை தளத்தில் மாற்றுத்திறனாளிகளிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுகொண்டு, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில்,

1 மாற்றுத்திறனாளிக்கு ரூ.2,780 மதிப்பில் காதொலிக்கருவி மற்றும் 1 மாற்றுத்திறனாளிக்கு ரூ.730 மதிப்பில் தாங்கு கட்டை (அக்குள் கட்டை) உள்ளிட்ட அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.

இக்கூட்டத்தில் தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) பிரபாகரன், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) செல்வராசு, வருவாய் கோட்டாட்சியர்கள் பார்தீபன் (நாமக்கல்), சுகந்தி (திருச்செங்கோடு) உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# பழைய 50 ரூபாய் நோட்டுக்கு ரூ.4 லட்சம் தருவதாக முதியவரிடம் ரூ.35 ஆயிரம் நூதன மோசடி

புதுச்சேரி, நவ.5-

புதுச்சேரி வில்லியனூரைச் சேர்ந்தவர் ராஜேஷ் (வயது 55). இவரது பேஸ்புக் பக்கத்தில் பழைய நாணயங்கள் அல்லது ரூபாய் நோட்டுக்கள் இருந்தால் அதிக விலை கொடுத்து வாங்கி கொள்கிறோம் என விளம்பரம் வந்தது.

இதனை பார்த்த ராஜேஷ் அதில் இருந்த தொலைபேசி எண் மூலம் தொடர்பு கொண்டார். அப்போது எதிர்முனையில் பேசிய நபர் உங்களிடம் எந்த காலத்து நாணயம் மற்றும் ரூபாய் நோட்டு உள்ளது என கேட் டுள்ளார். அதற்கு ராஜேஷ் 50 வருடத்திற்கு முந்தைய 5 ரூபாய் நோட்டு இருப்பதாக தெரிவித்தார்.

அதற்கு அந்த நபர் ரூபாய் நோட்டை போட்டோ எடுத்து அனுப்புமாறும் அது பழைய நோட்டுத்தானா என பார்த்து உறுதி செய்து கொள்வதாக தெரிவித்தார்.

அடுத்த ஒரு மணி நேரத்தில் அந்த நபர் இது பழங்கால நோட்டு தான் இதை நாங்கள் ரூ.4 லட்சத்திற்கு எடுத்து கொள்கிறோம் என கூறி, பின்னர் ரூ.4 லட்சத்திற்கான முதலில் ஜி.எஸ்.டி. செலுத்த வேண்டும் என கூறியுள்ளனர். இதை நம்பிய ராஜேஷ் ரூ. 35 ஆயிரம் அவர்கள் கூறிய வங்கி கணக்கிற்கு அனுப்பினார். அதன்பின் எதிர் முனையில் இருந்து எந்த தகவலும் வரவில்லை.

அதன் பிறகு தாம் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த ராஜேஷ் புதுச்சேரி சைபர் கிரைம் போலீசில் புகார் கொடுத்தார். அதன்பேரில் போலீசார் விசாரித்து வருகின்றனர்.

# ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் ஆட்சியர் ஆய்வு



கோவை, நவ. 5-

கோயமுத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவில், வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத்துறையின் கீழ் செயல்பட்டுவரும், ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் விலை ஆதார திட்டத்தின் கீழ் பயன்பெற்ற பயனாளிகளிடம் நிறைந்தது மனம் நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் கிராந்திகுமார் பாடி செய்தியாளர்களுடன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பயனாளிகளிடம் இத்திட்டத்தின் பயன் குறித்து கலந்துரையாடினார்.

நிறைந்தது மனம் நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது, தமிழ்நாடு அரசு விவசாயிகளின் விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்கவும், வருவாயைப் பெருக்கவும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தென்னை சாகுபடி செய்யும் விவசாயிகள் பயன்பெறும் வகையில் விலை ஆதரவு திட்டத்தின் கீழ் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் வாயிலாக கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் பொள்ளாச்சி, நெகமம், செஞ்சேரி, ஆனைமலை மற்றும் கிணத்துக்கடவு, தொண்டாமுத்தூர் மற்றும் அன்னூர் ஆகிய ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் கொப்பரை கொள்முதல் நிலையங்களாக செயல்பட்டு வருகின்றன. தென்னை சாகுபடி செய்யும் விவசாயிகளின் நலனுக்காக நிர்ணயிக்கப்பட்ட தரம், அளவு கொண்ட அரவைத் தேங்காய் கொப்பரை கிலோ ரூ.111.60க்கும் பந்து தேங்காய் கொப்பரை கிலோ ரூ.120க்கும் கொள்முதல் செய்யப்படுகிறது.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள 10 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலமாக விலைஆதரவு திட்டத்தின் கீழ் 2022-23 ஆம் ஆண்டில் 14,669 விவசாயிகளிடம் இருந்து ரூ.184 கோடி மதிப்பிற்கு 17,400.15 மெ.டன் கொப்பரை தேங்காய்களும், 2023-24 ஆம்ஆண்டில் 20924 விவசாயிகளிடம் இருந்து ரூ.306.314 கோடி மதிப்பிற்கு 28205.75 மெ.டன் கொப்பரை தேங்காய்களும், 2024-25 ஆம் ஆண்டில் 8,175 விவசாயிகளிடம் இருந்து ரூ.129.824 கோடி மதிப்பிற்கு 11584.45 மெ.டன் கொப்பரை தேங்காய்களும் என மொத்தம் ரூ.620.13 கோடி மதிப்பிற்கு 57,190.35 மெட்ரிக் டன் கொப்பரை தேங்காய்கள் கடந்த மூன்று ஆண்டுகளில் கொள்முதல் செய்யப்பட்டு 43,768 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

கிணத்துக்கடவு பகுதியை சேர்ந்த காளிமுத்து, அவர்களிடம் மாவட்ட ஆட்சித்தலைவர் இத்திட்டத்தின் பயன்குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் கேட்டறிந்தபோது, அதற்கு அவர், கொப்பரை வெளிசந்தையில் கிலோ 80 ரூபாய்க்கும் கீழ் விற்பனையான போது விலை ஆதரவு திட்டத்தின் கீழ் அரசால் எங்களைப் போன்ற விவசாயிகளிடம் இருந்து கிலோ ரூ.111.60க்கு கொள்முதல் செய்யப்பட்டது.

நான் என்னுடைய கொப்பரை தேங்காயை கிணத்துக்கடவு ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் விற்றபோது எனக்கு கிலோவிற்கு 31 ரூபாய் இலாபம் கிடைத்தது. இதனால் மொத்தமாக கொப்பரை தேங்காய் விற்பனை செய்ததில் எனக்கு நல்ல இலாபம் கிடைத்தது. இத்திட்டத்தை ஒவ்வொரு ஆண்டும் தொடர வேண்டும். இத்திட்டத்தை செயல்படுத்தியதற்கு நிறைந்த மனதுடன் நன்றி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், பொள்ளாச்சி நகராட்சி தலைவர் ஷியமளா நவநீதகிருஷ்ணன், இணை இயக்குநர் (வேளாண்மை) வெங்கடாச்சலம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) மல்லிகா, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் செந்தில் அண்ணா உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# கார்த்திகை தீபத்திருவிழா முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆலோசனைக் கூட்டம்




திருவண்ணாமலை, நவ. 5-

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் பாஸ்கர பாண்டியன் தலைமையில் அருணாச்சலேசுவரர் கோயிலில் திருக்கார்த்திகை தீபத்திருவிழா 2024 முன்னேற்பாடு பணிகள் குறித்து அனைத்து துறை அலுவலர்களுடன் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் வருகின்ற டிசம்பர் 13, 2024 அன்று அருணாச்சலேசுவரர் கோயில் கார்த்திகை தீபத்திருவிழா முன்னிட்டு இந்து சமய அறநிலையத்துறை, வருவாய்த்துறை, போக்குவரத்து துறை, ஊரக வளர்ச்சித்துறை, காவல்துறை, நகராட்சி நிர்வாகம், பொதுப் பணித்துறை, நெடுஞ் சாலைத்துறை, மருத்துவம் மற்றும் மக்கள்நல்வாழ்வுத் துறை, உணவு பாதுகாப்புத் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை, தமிழ்நாடு மின்பகிலீ;மான கழகம், மகளிர் ஊரக வாழ்வாதார இயக்கம், சமூக நலத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, செய்தி மக்கள் தொடர்பு துறை, தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் உள்ளிட்ட அரசு துறைகளின் சார்பாக் மேற்கொள்ள வேண்டிய முக்கிய பணிகள் குறித்து ஆலோசனைகளை துறைச் சார்ந்த அலுவலர்களுக்கு வழங்கினார்கள்.

இக்கூட்டத்தை தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் செய்தியாளர்களுக்கு தெரிவித்ததாவது: அருணாச்சலேசுவரர் கோயில் கார்த்திகை தீபத் திருவிழா வருகின்ற டிசம்பர் 01 முதல் 17 ஆம் தேதி வரை கொண்டாடப்படவுள்ளது. டிசம்பர் 4ஆம் தேதி அன்று கொடியேற்றம், டிசம்பர் 7ஆம் தேதி அன்று வெள்ளி காமதேனு கர்ப்பக விருட்ச வாகனம், டிசம்பர் 8 ஆம் தேதி அன்று வெள்ளி ரிஷப வாகனம், டிசம்பர் 9 ஆம் தேதி அன்று வெள்ளி ரதம், டிசம்பர் 10 ஆம் தேதி அன்று பஞ்சமூர்த்திகள் மகா ரதமும், டிசம்பர் 13 ஆம் தேதி அன்று காலை பரணி தீபம் மற்றும் மாலை 06 மணிக்கு மகா தீபத் திருவிழா நடைபெறவுள்ளது. இத்திருவிழாவிற்கு சுமார் 35 இலட்சம் பக்தர்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. பக்தர்களுக்கு தேவையான போக்குவரத்து, உணவு, குடிநீர், கழிவறை வசதிகள் குறித்தும், கிரிவலப் பாதையில் மேற்கொள்ள வேண்டிய அடிப்படை வசதிகள் குறித்தும், பாதுகாப்பு முன்னேற்பாடுகள் குறித்தும், அரசு துறைகளின் சார்பாக மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும் விரிவான முதற்கட்ட ஆலோசனைக் கூட்டம் அறங்காவலர் குழுத்தலைவர், உறுப்பினர்கள், மற்றும் இந்துசமய அறநிலையத்துறை இணை ஆணையர், அரசு துறை அலுவலர்களுடன் தற்பொழுது நடைபெற்றுள்ளது. தொடர்ந்து, கார்த்திகை தீபத்திருவிழா சிறப்பாக நடைபெறுவதற்கு பல்வேறு களப்பணிகள் மற்றும் கள ஆய்வுகள் தொடர்ந்து மேற்கொள்ளப் படும்.

கடந்த காலங்களில் கார்த்திகை தீபத்திருவிழாவின் போது பக்தர்களுக்கு ஏற்பட்ட சிரமங்களை களையும்பொருட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. பரணி தீபத்திற்கு 7050 நபர்களும், மகா தீபத்திற்கு 11500 நபர்களும் கோயில் வளாகத்திற்குள் அனுமதிக்கப்படுவார்கள், மலை ஏறுவதற்கு மருத்துவக்குழு மூலமாக உடற்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் 2000 நபர்களுக்கு பாஸ் வழங்கி அனுமதிக்கப்படுவார்கள். பரணி தீபத்திற்கு கட்டளைதாரர்கள் மற்றும் உபயதாரர்கள் 5200 நபர்களும், மகா தீபத்திற்கு கட்டளைதாரர்கள் மற்றும் உபயதாரர்கள் 8000 நபர்களும் கோயிலுக்குள் அனுமதிக்கப்படுவார்கள். மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பாக கோவில் வளாகத்தில் 5 சிறப்பு மருத்துவ குழுக்களும் (இருதயநோய் மயக்கவியல், பொது மருத்துவருடன்), கிரிவலப்பாதை மற்றும் தற்காலிக பேருந்து நிலையங்களில் 85 நடமாடும் மருத்துவ குழுக்கள் (1 மருத்துவர், 1 செவிலியர் மற்றும் மருந்தாளுனர்) அமைக்கப்படும், மேலும், 25 அவசர கால ஊர்திகள் தயார்நிலையில் வைக்கப்படும்.

பொதுப்பணித்துறை அமைச்சர் அறிவுறுத்தலின் படி, கோயில் வளாகத்தில் காவல்துறை சார்பாக பாதுகாப்பு பணியின் தேவைக்கேற்ப போதுமான அளவிலான காவலர்களை பணியமர்த்துவதற்கு ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டு, பணியமர்த்தப்படுவார்கள். மேலும், மாநகரம் முழுவதும் காவல்துறை சார்பாக தேவையான அளவிலான காவலர்கள் பாதுகாப்பு பணியில் அமர்த்தப்படுகின்றனர். மாநகரின்; ஒவ்வொரு 500 மீட்டருக்கும் 1+5 என்ற அளவில் காவலர் அணிகள் நிறுத்தப்படும். ஆட்டோக்கள் முறைப் படுத்தப்படும் திருவிழா நாளன்று கனரக வாகனங்கள் வெளி சாலைகளிலே திருப்பிவிடப்படும். மாவட்டத்தினை இணைக்கும் அனைத்து எல்லைகளிலும் பாதுகாப்பு சோதனையில் காவலர்கள் ஈடுபடுவார்கள். கிரிவலப் பாதை மற்றும் துணை காவல்துறை தலைவர், காவல் கண்காணிப்பாளர் உள்ளிட்ட அனைத்து நிலை காவலர்களும் பணியில் அமர்த்தப்படுவர் என மாவட்ட ஆட்சித் தலைவர் செய்தியாளர்களுக்கு தெரிவித்தார்கள்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ராம்பிரதீபன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மணி, அருணாச்சலேசுவரர் கோயில் இணை ஆணையர் ஜோதி, அறங்காவலர் குழு தலைவர் ஜீவானந்தம் மற்றும் அரசு துறைச்சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்கள்.

E-mail:maalaiexpresspdy@gmail.com
● செவ்வாய் ● நவம்பர் 5, 2024
மாலை எக்ஸ்பிரஸ்

# கேரளா மாநிலத்தில் ரயில் மோதி உயிரிழந்த தூய்மை பணியாளர்கள் குடும்பத்துக்கு நிதி உதவி



**சேலம், நவ. 5-**

சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் கேரளா மாநிலத்தில் ரயில் மோதிய விபத்தில் உயிரிழந்த சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த தூய்மைப் பணியாளர்களின் குடும்பத்தினருக்கு நிவாரண நிதியுதவிக்கான காசோலைகளை சேலம், ஆச்சாங்குட்டப்பட்டியில் வழங்கி ஆறுதல் தெரிவித்தார்கள்.

கேரளா மாநிலம், பாலக்காடு, ஷோரனூர், பாரதப்புழா பாலம் அருகில் 2.11.2024 அன்று பிற்பகல் கேரளா எக்ஸ்பிரஸ் ரயில் எதிர்பாராதவிதமாக மோதிய விபத்தில் ரயில் பாதையை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த சேலம் மாவட்டம் மற்றும் வட்டம், ஆச்சாங்குட்டப்பட்டி, அடிமலை புதூர் கிராமத்தைச் சேர்ந்த லட்சுமணன் (55), வள்ளி (45), காரைக்காடு, டி. பெருமாள் பாளையத்தைச் சேர்ந்த லட்சுமணன் (45), அல்லிக்குட்டையைச் சேர்ந்த ராஜம்மாள் (43) ஆகிய நால்வரும் உயிரிழந்தனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என அறிவித்திருந்தார்கள். அதனடிப்படையில், சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் சேலம் வட்டம், ஆச்சாங்குட்டப்பட்டியில் உள்ள உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.3 லட்சம் நிதியுதவிக்கான காசோலைகளை வழங்கி, ஆறுதல் தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் பிருந்தாதேவி, கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் மலையரசன், சேலம் வட்டாட்சியர் தாமோதரன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

# உதகை-குன்னூர் மலை ரெயில் சேவை இன்று ரத்து

**குன்னூர், நவ. 5-**

நீலகிரி மாவட்டம் குன்னூர் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த 3 நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இந்தநிலையில் நேற்று முன்தினம் இரவு குன்னூர் பகுதியில் இடி, மின்னலுடன் கனமழை பெய்தது. இதனால் முக்கிய சாலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது.

கனமழை காரணமாக குன்னூர் மேட்டுப்பாளையம் சாலையில் மரப்பாலம் பகுதியில் மரம் முறிந்து விழுந்தது. இதனால் வாகனங்கள் செல்ல முடியாமல் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. கனமழையால் மரப்பாலம், காட்டேரி பூங்கா, கரும்பாலம், சேலாஸ் உள்பட 6 இடங்களில் மண் சரிவு ஏற்பட்டது. இதனால் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. இதை அறிந்த வருவாய்த் துறையினர், நெடுஞ்சாலைத் துறையினர் பொக்லைன் எந்திரம் மூலம் சாலையில் விழுந்த மண், பாறைகளை அகற்றினர். கனமழை காரணமாக குன்னூர் தாலுகாவில் உள்ள பள்ளி, கல்லூரிகளுக்கு நேற்று விடுமுறை விடப்பட்டு இருந்தது.

இந்நிலையில் கனமழை காரணமாக தண்டவாளத்தில் மண் சரிவு ஏற்பட்டுள்ளதால், உதகை குன்னூர் இடையே இயங்கும் மலை ரெயில் சேவை இன்று (நவ.5) ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## இன்று மாலை வாக்குப்பதிவு தொடக்கம்... (முதல் பக்க தொடர்ச்சி)

ஜார்ஜியா, மிக்சிகன், நெவாடா, வடக்கு கரோலினா, பென்சில்வேனியா, விஸ்கான்சின் ஆகியவை உள்ளன. இதில் மிக்சிகன், விஸ்கான்சின் ஆகிய 2 மாகாணங்களில் கமலா ஹாரிஸ் முன்னிலையில் இருக்கிறார். மற்றவற்றில் டிரம்பே முன்னிலையில் இருக்கிறார்.

இந்தநிலையில் ஜனாதிபதி தேர்தலுக்காக வாக்குப்பதிவு இன்று (செவ்வாய்க்கிழமை) நடக்கிறது. இதற்காக அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

இதனிடையே ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடும் கமலா ஹாரிஸ், இ மெயில் மூலம் நேற்று தனது வாக்கை செலுத்தினார்.

அமெரிக்காவில் மாகாணங்களுக்கு இடையே நேர வித்தியாசம் உள்ள நிலையில், இந்திய நேரப்படி இன்று மாலை 4.30 மணி முதல் 7.30 மணிக்குள் ஒவ்வொரு மாகாணங்களாக வாக்குப்பதிவு தொடங்கி நாளை கலை 5.30 மணிக்கு நிறைவடையும்.

வாக்குப்பதிவு முடிந்தவுடன், உடனடியாக வாக்கு எண்ணிக்கையும் தொடங்கிவிடும். இழுபறி எதுவும் இல்லை என்றால், அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதி யார் என்பது உடனடியாக தெரியவரும். அதிகாரப்பூர்வமான முடிவுகள் நாளை (புதன்கிழமை) தெரிந்துவிடும். அதே வேளையில், இறுதி முடிவு அறிவிக்கப்படுவதற்கு சில நாட்கள் ஆகலாம் என்று கூறப்படுகிறது. 2020ம் ஆண்டில், அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நவம்பர் 3ம் தேதி நடந்தன, ஆனால் ஜோ பைடன் நவம்பர் 7ம் தேதி வரை வெற்றியாளராக அறிவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஜனாதிபதி தேர்தலில் கமலா ஹாரிஸ், டிரம்ப் இடையே கடும் போட்டி இருந்து வருகிறது.

தற்போதைய நிலையில், அரிசோனா, ஜார்ஜியா, வடக்கு கரோலினா மாகாணங்களில் டிரம்புக்கு 49 சதவீதம் பேர் ஆதரவு தெரிவித்துள்ளனர். அதேநேரம், மிச்சிகன், விஸ்கான்சின் மாகாணங்களில் ஹாரிசுக்கு 49 சதவீதம் பேர் ஆதரவாக உள்ளனர். நெவேடா, பெல்சில்வேனியா மாகாணங்களில் இருவருக்கும் 48 சதவீதம் பேர் ஆதரவு தெரிவிப்பதாக கருத்துக்கணிப்புகள் தெரிவிக்கின்றன. தேர்தல் வாக்குகளை எண்ணி வெற்றியாளரை அதிகாரப்பூர்வமாக அறிவிக்க ஜனவரி 6ம் தேதி காங்கிரஸ் சபை அமெரிக்காவில் கூடும். புதிய அமெரிக்க ஜனாதிபதி ஜனவரி 20ம் தேதி பதவியேற்பார்.

## வாயு கசிவு ஏற்பட்ட தனியார் பள்ளிக்கு 3 நாட்கள் விடுமுறை... (முதல் பக்க தொடர்ச்சி)

அளிக்கப்பட்டது. பள்ளியில் உள்ள ஆய்வுக்கூடத்தை மாசு கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். ஆனால் தற்போது வரை ஆய்வுக்கூடத்தில் ரசாயன வாயுகசிவு ஏற்பட்டுள்ளதை கண்டுபிடிக்க முடியாமல் அதிகாரிகள் திணறி வருகின்றனர்.

தீபாவளி விடுமுறை முடிந்து நேற்று மீண்டும் பள்ளி திறக்கப்பட்டது. அப்போது திடீரென்று 9 மாணவிகள் மயக்கம் அடைந்தனர். மீண்டும் பள்ளியில் ரசாயன வாயு கசிவு ஏற்பட்டதால் மாணவிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டதாக கூறப்படுகிறது. இதனால் பெற்றோர்கள் அலறி அடித்துக்கொண்டு தங்கள் பிள்ளைகளை அழைத்துக்கொண்டு வீட்டுக்கு சென்றனர். மயக்கம் ஏற்பட்ட மாணவிகளை ஆம்புலன்ஸ் மூலம் எல்லையம்மன் கோவில் அருகில் உள்ள அரசு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

இது பற்றி தகவல் அறிந்ததும் தீயணைப்பு துறையினர், தாசில்தார் சகாயராணி, திருவொற்றியூர் மண்டல அதிகாரி புருஷோத்தமன், மருத்துவத்துறை அதிகாரிகள் உடனடியாக பள்ளிக்கு வந்தனர். மாநகராட்சி வடக்கு வட்டாரத் துணை கமிஷனர் ரவிகட்டா தேஜா அதிகாரிகளுடன் பள்ளியை ஆய்வு செய்தனர்.

தனியார் பள்ளியில் மாசு கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் தொடர்ந்து இன்று 2வது நாளாக சோதனை நடத்தி வருகின்றனர். காற்றில் இருக்கக்கூடிய நச்சுத்தன்மை, வாயுக்களின் தரம் அறியும் இயந்திரம் கொண்டு மாசு கட்டுப்பாட்டு வாரியம் சோதனை நடத்தியது.

இந்நிலையில் வாயு கசிவு ஏற்பட்ட தனியார் பள்ளிக்கு 3 நாட்கள் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக 3 நாட்கள் ஆய்வு செய்து இந்த வாரத்தின் இறுதியில் இறுதி அறிக்கையை சமர்ப்பிக்க அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.

# அரசு மருத்துவமனையில் ஆட்சியர் ஆய்வு



கடலூர், அரசு தலைமை மருத்துவமனையில் பல்வேறு பிரிவுகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் திடீர் ஆய்வு மேற்கொண்டு, மருத்துவமனைக்கு சிகிச்சை பெற்று வருபவரிடம் நலம் விசாரித்து, மருத்துவமனையால் வழங்கப்படும் சேவைகள் குறித்து கேட்டறிந்தார்.

# ஆக்கிரமிப்பு அகற்றும் பணிகளை ஆட்சியர் ஆய்வு



மதுரை மாநகராட்சி, மகாலட்சுமி நகர் பகுதியில் உள்ள கழிவுநீர் கால்வாய்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றும் பணிகளை மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா ஆய்வு செய்து பார்வையிட்டார். அருகில் மதுரை மாநகராட்சி ஆணையாளர் தினேஷ்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் சக்திவேல், மதுரை வருவாய் கோட்டாட்சியர் ஷாலினி.

# ஈமசடங்கு உதவித்தொகை வழங்கிய ஆட்சியர்



வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக காயிதே மில்லத் கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் சுப்புலெட்சுமி தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் நல வாரியத்தின் மூலம் இயற்கை மரணம் அடைந்த 10 மாற்றுத்திறனாளிகளின் வாரிசுதாரர்களுக்கு ஈமசடங்கிற்கான உதவித்தொகை தலா ரூ.17,000 வீதம் ரூ.1,70,000 மதிப்பிலான காசோலைகளை வழங்கினார். அருகில் மாவட்ட வருவாய் அலுவலர் மாலதி, மாவட்ட வருவாய் அலுவலர் (நில எடுப்பு) ராஜ்குமார்.

# எடப்பாடி பழனிசாமி மனுவை ஏற்க கூடாது: தயாநிதி மாறன் தரப்பில் ஆட்சேபம்

**சென்னை, நவ. 5-**


மக்களவைத் தேர்தலின் போது, மத்திய சென்னை தொகுதி தேமுதிக வேட்பாளர் பார்த்தசாரதியை ஆதரித்து பிரச்சாரம் செய்த அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, மத்திய சென்னை எம்.பி.யாக இருந்த தயாநிதி மாறன், தொகுதி மேம்பாட்டு நிதியை முறையாக செலவிடவில்லை எனக் கூறிருந்தார். இந்த பேச்சுக்கு மறுப்பு தெரிவித்த தயாநிதி மாறன், எடப்பாடி பழனிசாமிக்கு எதிராக அவதூறு வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள எம்.பி., எம்.எல்.ஏக்கள். மீதான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு கோர்ட்டில் விசாரணையில் உள்ளது. இந்த வழக்கில் இருந்து விடுவிக்க கோரி எடப்பாடி பழனிச்சாமி தரப்பில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு விசாரணைக்கு உகந்ததல்ல என ஆட்சேபம் தெரிவித்து, தயாநிதி மாறன் தரப்பில் வழக்கறிஞர் விவேகானந்தன் பதில்மனு தாக்கல் செய்துள்ளார்.

அதில், புதிய குற்றவியல் சட்டமான பாரதிய நகரிக் சுரக் ஷா சன்ஹிதா எனும் பி.என்.எஸ்.எஸ். அமலுக்கு வரும் முன்பே இந்த அவதூறு வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், அதனால், அவதூறு வழக்கில் இருந்து விடுவிக்கக் கோரி பி.என்.எஸ்.எஸ். சட்டத்தின் கீழ் எடப்பாடி பழனிச்சாமி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவை ஏற்றுக் கொள்ளக் கூடாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், குற்றச்சாட்டுகள் குற்றம் சாட்டப்பட்டவருக்கு வாசித்து காட்டப்பட்டு விட்டதால், வழக்கில் இருந்து விடுவிக்க கோர முடியாது எனவும் கூறப்பட்டுள்ளது. இதையடுத்து, எடப்பாடி பழனிச்சாமி தாக்கல் செய்த மனு மீதான வாதங்களுக்காக, அவதூறு வழக்கு விசாரணையை டிசம்பர் 2ம் தேதிக்கு தள்ளிவைத்து சிறப்பு கோர்ட்டு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com Ph : 0413-2226989, 9842335007



# அமெரிக்க ஜனாதிபதி யார்? இன்று மாலை வாக்குப்பதிவு



# நடிகர் சல்மான் கானுக்கு கொலை மிரட்டல்





# 2026 தேர்தலில் யாருடன் கூட்டணி—திருமாவளவன் பதில்


# மாலை எக்ஸ்பிரஸ்



Email: maalaiexpresspdy@gmail.com



• 5-11-2024 செவ்வாய்க்கிழமை • வெளியூர்: 6-11-2024 புதன்கிழமை • பக்கம் 6 • ரூ.600 காசுகள்